**உள்ளக ஆட்சேர்ப்பு அறிவிப்பு!** **(Kushpoo font)**

PPSC/EX/3/
வடமேல் மாகண சபை அரச சேவை ஆணைக்குழு,
மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருணாகல்.
2022.04.08

## வடமேல் மாகாண சபை பாடசாலைகளில் இலங்கை ஆசிரியர் சேவையில் 3 ஆம் வகுப்பில் 1(அ) தர வெற்றிடங்களுக்கு பட்டதாரி பயிற்சியாளர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு – 2022

இலக்கம் அகுப : 21/0658/340/013 மற்றும் 2021.04.19 திகதி மற்றும் இலக்கம் அகுப: 21/2076/315/033-1 மற்றும் 2021.12.13 திகதி அமைச்சுக் குழு தீர்மானமும் வடமேல் மாகாண அரச சேவையில் இலங்கை ஆசிரிய சேவை ஏற்பாடு விதிகளுக்கமைய, வடமேல் மாகாணத்தில் மாகாண சபை பாடசாலைகளில் காணப்படுகின்ற ஆசிரியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கை ஆசிரிய சேவையில் 3 ஆம் வகுப்பு I (அ) தரத்திற்கு, பிரதேச செயலகப் பிரிவினை அடிப்படையாக கொண்டு சேர்த்துக் கொள்வதற்கும், பின்வரும் வகை உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- பட்டதாரி வேலைவாய்ப்பு திட்டம் - 2020 இன் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அனைத்து பட்டதாரி பயிற்சியாளர்களும் அத் திட்டத்தின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அபிவிருத்தி உத்தியோக சேவையில் நிரந்தரமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட குழுவும்.

- 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட “அரச நிறுவனங்களில் பயிற்சி பட்டதாரிகளுக்கான பயிற்சி” திட்டத்தின் கீழ் பட்டதாரி பயிலுனர்களாக பயிற்சிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் நிரந்தர நியமனம் பெற்ற குழு.

- பட்டதாரி வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் டிப்ளோமாதாரர்கள் பணியமர்த்தப்பட்ட பாடங்களுக்கு டிப்ளோமாதாரர்கள்.

### 01. 1.1 கல்வித் தகைமைகள் :-

I. கற்பித்தல் பணிக்காக அங்கீகரிக்கப்பட்ட ஒரு சிறப்புத் துறையைச் சேர்ந்த, பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தால் அல்லது பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனத்தால் வழங்கப்பட்ட பட்டம் / டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

**II.** கல்விப் பொது சான்றிதழ் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழி மற்றும் கணிதத்துடன் சித்தியடைந்திருக்க வேண்டும்..

### 1.2 உடல் மற்றும் உள ஆரோக்கியம்:-

ஒவ்வொருவரும் ஆசிரியராக தனது கடமைகளைச் செய்ய உள ரீதியாகவும் உடல் ரீதியாகவும் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

**1.3 வயது:-**

2019.12.31 ஆந் திகதிக்கு வயது 35 வருடத்திற்கு மேற்படலாகாது.

## 02. ஏனைய தகைமைகள்:-

I. விண்ணப்பதாரர் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்

II. விண்ணப்பதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் கிடைப்பதற்கு தகைமை பெறுவதற்காக வடமேல் மாகாணத்தினுள் குறைந்த பட்சம் 03 ஆண்டுகள் நிரந்தரமாக வசிப்பராக இருத்தல் வேண்டும்.
குறித்த பாட வெற்றிடத்திற்கு சேர்த்துக் கொள்ளும் போது வடமேல் மாகாணத்தினுள் நிரந்தர வசிப்பவர்கள் இல்லாத போது மட்டுமே ஏனைய மாகாணங்களில் நிரந்தரமாக வசிக்கும் விண்ணப்பதாரிகள் தொடர்பான கருத்தில் எடுக்கப்படும்.

III. விண்ணப்பதாரர் நல்லொழுக்கமும் நல்ல ஆரோக்கியத்துடனும் இருக்க வேண்டும்.

IV. வடமேல் மாகாணத்தில் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்ற கூடியவராக இருக்க வேண்டும்.

## 03. சம்பளத் திட்டம்:-

தற்காலிக ஆசிரிய நியமன காலத்தினுள், அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு உரித்துடைய சம்பள அளவுத்திட்டத்திற்கு அமைய சம்பளம் வழங்கப்படும், ஆசிரிய சேவையில் சட்டரீதியாக நியமனம் வழங்கப்பட்டப் பின்பு குறித்த சம்பளத் திட்டத்தில் நிலைநிறுத்தப்படுவர்.

## 04. சேவை நிபந்தனைகள் :-

I. அரச/மாகாண சபை அரச சேவை நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், வடமேல் மாகாண சபை அரச சேவையில் இலங்கை ஆசிரிய சேவை விதிக் கோவையில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், அவ் விதிகளில் செய்யப்பட்டுள்ள அல்லது எதிர்காலத்தில் செய்யப்படுகின்ற திருத்தங்களுக்கும் உட்பட்டு தேர்ந்தெடுக்கப்படுகின்ற பட்டதாரிகள் இலங்கை ஆசிரிய சேவையில் 3 ஆம் வகுப்பில் I(அ) தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

II. இவ்வாறு வழங்கப்படும் ஆசிரிய நியமனம் தற்காலிக ஆசிரிய நியமனமாவதுடன், நியமனம் வழங்கப்படும் பாடசாலையில் 10 ஆண்டுகள் கட்டாயமாக பணியாற்றுவதற்கு உடன்படல் வேண்டும்.

III. தற்காலிக நியமனம் வழங்கப்பட்டு 3 ஆண்டுகளினுள் வடமேல் மாகாண சபை ஆசிரிய சேவை சட்டத்தின் ஏற்பாடுகழுக்கமைய எழுத்து மூலமான பரீட்சை ஒன்றினை நடாத்தி, அதில் சித்தியடைகின்ற உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் நியமனம் வழங்கப்படும். .

IV. அந்த பரீட்சையில் சித்தியடையாத விண்ணப்பதாரிகளுக்காக ஒரு ஆண்டினுள் மீண்டும் பரீட்சை நடாத்துதல் அல்லது அவர்களை முன்பு கடமையாற்றிய பதவிக்கு நியமித்தல் அல்லது பட்டதாரி பயிற்சியாளர் அபிவிருத்தி உத்தியோகத்தராக இணைத்தலோ செய்யப்படுவர்.

## 05. ஆட்சேர்ப்பு முறை :-

5.1. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி பாடங்களுக்காக பிரதேச செயலக பிரிவினை அடிப்படையாக கொண்டு ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

5.2 பிரதேச செயலக பிரிவுகளை அடிப்படையாக கொண்டு ஆசிரியர்களின் வெற்றிடங்களுக்கு ஆட்களை தெரிவு செய்யும் போது ஒவ்வொரு விண்ணப்பதாரரினதும் கல்வித் தகைமைகளையும் கருத்தில் கொண்டு பாடம் சம்பந்தப்பட்ட வெற்றிடங்களுக்கு மாத்திரம் ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். .

5.3 தேர்ந்தெடுப்பதற்காக, நேர்முகப் பரீட்சை ஒன்றினை நடாத்தி சேர்த்துக் கொள்வதற்குரிய தகைமை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்று பரிசீலித்து, இதில் தகைமையுடைய விண்ணப்பதாரிகள் நடைமுறை பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

5.4 ஒவ்வொரு மொழியிலான பாடத்திற்கும் உள்ள வெற்றிடங்களுக்காக நியமனம் வழங்கும் போது நேர்முகப் பரீட்சையின் புள்ளி மற்றும் செயல்முறை பரீட்சையின் புள்ளி ஆகிய இரண்டினதும் கூட்டுத் தொகையில் முன்னுரிமைப்படி நியமனம் வழங்கப்படும். .

**06. 6.1 நேர்முகப் பரீட்சை:-**

விண்ணப்பப் பத்திரங்களை சமர்பிக்கின்ற விண்ணப்பதாரிகளுக்காக நேர்முகப் பரீட்சை நடாத்தி, சேர்த்துக் கொள்வதற்குரிய தகைமைகளை பூர்த்தி செய்துள்ளதா என்று பரிசீலித்து, கீழ் காணப்படுமாறு புள்ளிகள் வழங்கப்படும்.

**(அ) பட்டம் மற்றும் வகுப்பு தேர்ச்சிக்காக புள்ளி வழங்குதல் (10 புள்ளிகள்)**

| தொடர் இலக்கம் | பட்டத்திற்காக புள்ளி வழங்குதல் | | ஆகக்கூடிய புள்ளி |
|---|---|---|---|
| 01 | சிறப்புப் பட்டம் | | 10 |
| 02 | சாதாரண பட்டம் | முதல் தரத்தில் உயர் வகுப்பு தேர்ச்சியுடன் சாதாரண பட்டம் | 10 |
| | | இரண்டாம் தரத்தில் உயர் வகுப்பு தேர்ச்சியுடன் சாதாரண பட்டம் | 8 |
| | | இரண்டாம் தரத்தில் கீழ் வகுப்பு தேர்ச்சியுடன் சாதாரண பட்டம் | 6 |

**(ஆ) மேலதிக தகைமைகளுக்காக புள்ளி வழங்குதல் (15 புள்ளிகள்)**

| தொடர் இலக்கம் | அளவுகோல்கள் | ஆகக்கூடிய புள்ளி |
|---|---|---|
| 01 | அறநெறி பள்ளியில் இறுதி தேர்வு அல்லது தர்மாச்சார்ய தேர்வில் அல்லது பிற மதங்களுக்காக அதே அளவிலான தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளதாக அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும் | 05 |
| 02 | விளையாட்டு, அழகியல் ஆகிய பாடங்களுக்கு இணையாக செயற்பாடுகளுக்கு அரசினால் அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மட்டத்தில் முதல், இரண்டாவது, மூன்றாவது சாதனைகளுக்காக சான்றிதழ் ஒன்று அல்லது சில பெற்றிருக்க வேண்டும். | 05 |
| 03 | கஸ்ட பிரதேச செயலக பிரிவில்* குறைந்த பட்சம் 03 ஆண்டு காலம் வசிப்பது. | 05 |
| | மொத்த புள்ளிகள் | 15 |

* வடமேல் மாகாணத்தினுள் கஸ்ட பிரதேச செயலகப் பிரிவாக அடையாளம் காணப்பட்டுள்ள கீழ் காணப்படும் பிரதேச செயலக பிரிவு பாடசாலையில் காணப்படும் வெற்றிட பாடங்களுக்காக விரும்பம் தெரிவிக்கின்ற சந்தர்ப்பத்தில் அவ் விண்ணப்பதாரி அக் கஸ்டப் பிரதேச

செயலகப் பிரிவில் குறைந்த பட்சம் 03 ஆண்டுகள் நிரந்தரமாக வசிப்பவர் என்று கிராம சேவகரின் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்துவதாயின், அதற்காக 05 புள்ளிகள் வழங்கப்படும்.

| குருணாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள கஸ்ட பிரதேச செயலகப் பிரிவு | புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள கஸ்ட பிரதேச செயலகப் பிரிவு |
|---|---|
| நிக்கவெரடி | புத்தளம் |
| ரஸ்நாயக்கபுரம் | கல்பிட்டி |
| கொடவெஹெர | ஆணமடுவ |
| பொல்பிதிகம | கருவலகஸ்வெவ |
| எஹெடுவெவ | மஹகும்புக்கடவல |
| கல்கமுவ | முந்தலம் |
| அம்பன்பொல | நவகத்தேகம |
| கிரிபாவ | பல்லம் |
| மஹவ | வனாதவில்லுவ |
| | ஆரச்சிக்கட்டுவ |

## 6.2 செயல்முறை பரிசீலனை (ஆகக்கூடிய புள்ளிகள் 25)

மேலே 6.1 இல் குறிப்பிடப்பட்டவாறு நடாத்தப்படுகின்ற நேர்முகப் பரீட்சையில் தகைமையடைகின்ற விண்ணப்பதாரிகளுக்காக செயல்முறைப் பரீட்சை நடாத்தப்படும். செயல்முறைப் பரீட்சையில் விண்ணப்பதாரியினால் 10 நிமிடத்திற்கு குறையாத, தமது பாடத்திற்கு உரிய அடையாளம் காணப்பட்ட தலைப்பின் கீழ், ஒரு பாடத்தை முன்வைக்க வேண்டும். அச் செயல்முறைப் பரீட்சைக்காக கீழ் காணப்படுமாறு ஆகக் கூடிய புள்ளி 25 வழங்கப்படும்.

| தொடர் இலக்கம் | செயல்முறை பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் அளவுகோல்கள் | ஆகக்கூடிய புள்ளிகள் | தேர்ச்சி பெறுவதற்கு தேவையான புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | நோக்கம் மற்றும் அணுகல் | 5 | 2 |
| 2 | ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு | 5 | 2 |
| 3 | தெளிவான தகவல் தொடர்பாடல் | 5 | 2 |
| 4 | நேர முகாமைத்துவம் | 5 | 2 |
| 5 | விளக்குவதற்காக நுட்பங்களை பயன்படுத்தல் | 5 | 2 |
| | மொத்த புள்ளிகளின் எண்ணிக்கை | 25 | 10 |

- செயல்முறை பரிசீலனைக்காக 10 நிமிடங்களுக்கு குறையாத காலம் வழங்கப்படும்.
- செயல்முறை பரிசீலனையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு அளவுகோளுக்கும் குறைந்த பட்சம் 2 புள்ளிகள் படி பெறப்பட வேண்டும்.

## 07. தேர்ந்தெடுக்கப்படும் முறை:-

- ஓவ்வொரு மொழி மூலம் காணப்படும் பாடங்களுக்கான வெற்றிடங்களுக்கு நியமனம் வழங்கும் போது, நேர்முகப் பரீட்சையின் புள்ளியையும் செயல்முறைப் பரீட்சையின் புள்ளிகள் இரண்டினதும் கூட்டுத் தொகையின் முன்னுரிமைப்படி நியமனம் வழங்கப்படும். நியமனத்திற்காக தகுதி பெறுவதற்கு செயல்முறை பரிசீலனையில் தேர்ச்சி பெறுதல் கட்டாயமாகும்.

- டிப்ளோமாதாரர்கள் பணியமர்த்தப்படக்கூடிய பாடத்திற்கு போதுமான தகுதி வாய்ந்த பட்டதாரிகள் இல்லை என்றால் மட்டுமே, தகுதியான டிப்ளோமா வைத்திருப்பவர்களிடமிருந்து பொருத்தமான வெற்றிடங்கள் பரிசீலிக்கப்படும்.

## 08. பாடங்களை தேர்ந்தெடுப்பதற்கான ஆலோசனை :-

8.1 உங்களது பட்டப்படிப்பு பிரதான பாடத்திற்குரித்தாக உங்களது விருப்பப்படி 01 பாடத்திற்காக விண்ணப்பிக்கப்பட முடியும்.

ஒவ்வொரு பாடத்திற்கும் மற்றும் மொழிக்கும் உரித்தாக அமைப்பில் காணப்படுகின்ற ஆசிரிய வெற்றிடம் மற்றும் பாடத்தில் தேர்ச்சி ஆவணம், பிரதேச செயலக பிரிவுப்படி www.psc.nw.gov.lk இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**முக்கியம் :- ஒவ்வொரு பாடத்திற்காகவும் விண்ணப்பிக்கும் போது அப் பாடம் தமது பட்டப்படிப்பின் பிரதான பாடமாக கற்றிருத்தல் கட்டாயமாகும்.**

8.2 ஒரு வெற்றிட பாடத்திற்காக 03 பிரதேச செயலக பிரிவுகளுக்கு விருப்பு தெரிவிக்கலாம்.

8.3 ஆசிரிய நியமங்களுக்காக தேர்ந்தெடுத்தல் மற்றும் நியமனம் வழங்குவது, வெற்றிட எண்ணிக்கைக்கு உரித்தாக நேர்முகப்பரீட்சையில் மற்றும் செயல்முறைப் பரீலனையின் புள்ளிகளது கூட்டுத்தெகையில் கூட்டுவரிசைப்படி மாத்திரமாவதுடன் பிரதேச செயலக பிரிவிற்காக விருப்பு புள்ளி வழங்குதல், ஆசிரிய நியமனம் பெறுவதற்கு அது ஒரு தகுதி என்று கருதப்படுவதில்லை.

8.4 நேர்முகப் பரீட்சையின் மற்றும் செயல்முறைப் பரிசீலனையின் புள்ளிகளின் கூட்டுத்தொகையில் கூட்டுவரிசைப்படி தேர்ந்தெடுக்கப்படும் போது நீங்கள் கோருகின்ற பாடங்களுக்கு உரிய ஆசிரிய வெற்றிடம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் வேறு பாடத்திற்காக ஆசிரிய நியமனம் வழங்குவது அல்லது விருப்பு புள்ளி தெரிவிக்கின்ற எந்தவொரு பிரதேச செயலக பிரிவுகளில் குறித்த பாடத்தில் வெற்றிடம் இல்லாதிருந்தால் வேறு பிரதேச செயலகப் பிரிவில் அப் பாடத்தின் வெற்றிடத்திற்காக நியமனம் வழங்குவது அல்லது இது தொடர்பாக எழுகின்ற எந்தவொரு பிரச்சினைகளுக்கும் இறுதி தீர்மானம் எடுப்பது வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவிற்கு உரித்தானதாகும்.

## 09. விண்ணப்பிக்கும் முறை :-

- வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவின் இணையத்தளமாகிய www.psc.nw.gov.lk இணையத்தளத்திற்கு சென்று Online மூலம் விண்ணப்பிக்கலாம்.
- விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு மேலதிகமாக ஏதேனும் குறிப்பிடப்பட வேண்டுமாயின், அது பற்றி தரவு அமைப்பில் Requests/Comments நிரலில் குறிப்பிடப்பட வேண்டும்.
- விண்ணப்பப் படிவம் கோரப்படும் இறுதி திகதி 2022.05.10 ஆகும்.

## 10. இணையத்தளத்தை பரிசீலிப்பதற்கான பொது ஆலோசனை :-

- விண்ணப்பதாரியின் தேசிய அடையாளட்டையின் இலக்கம் (N.I.C. Number) தனது user name என்று பயன்படுத்த வேண்டியதுடன் பதிவுசெய்வதை பூர்த்தி செய்வதற்காக அவரினால்/அவளினால் கடவுச் சொல் (password) வழங்கி மீண்டும் login ஆக வேண்டும். Login ஆகிய பின்பு கடவுச் சொல்லை (password) திருத்தம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.
- விண்ணப்பதாரியின் கடவுச் சொல் (password) நினைவில் வைத்திருப்பதன் மூலம், உற்படுத்தப்படுகின்ற தகவல்களை திருத்தம் செய்வதற்கு முடியும்.

- விண்ணப்பப்படிவம் கோரும் இறுதித் தினம் வரை விண்ணப்பதாரிகளுக்கு தமது தகவல்களை திருத்தம் செய்ய முடியும்.

- விண்ணப்பப்படிவம் கோரும் இறுதி தினத்தின் பின்பு செய்யப்படும் கோரிக்கைகள் பொறுப்பேற்கப்படமாட்டாது.

- ஒன்லைன் விண்ணப்பப் படிவத்தில் சுய தகவல்கள், கல்வித் தகைமை மற்றும் விருப்பமுள்ள பிரதேச செயலக பிரிவினை தேர்ந்தெடுக்கும் ஆகிய பகுதிகள் விண்ணப்பதாரியினால் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

- ஒரு விண்ணப்பதாரியிற்கு ஒரு தடவை மாத்திரம் பதிவு செய்வதற்காக சந்தர்ப்பம் வழங்கப்படும்.

## 11. இணையத்தளத்தை பரிசீலிக்கும் தொழில்நுட்ப ஆலோசனை :-

- Login ஆன பின்பு கடவுச் சொல்லை (password) பெற்றுக் கொடுக்க வேண்டும். உங்களினால் வழங்கப்படும் கடவுச் சொல் (password) ஊடாக உங்களது தேர்வினை திருத்தம் செய்யலாம்.

- கடவுச் சொல் வழங்குவதற்கு முன் தகவல்களை வாசித்து நன்கு புரிந்துக் கொண்டதன் பின்பு மாத்திரமே குறித்த இடத்தில் (✓) புள்ளியை இட வேண்டும்.

- நிரலில் ‘‘கடவுச்சொல் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது’’ என்று தோன்றும். ‘‘முன்னே செல்லவும்’’ என்ற பொத்தானை click செய்த பின்பு மீண்டும் முதல் பக்கத்திற்கு செல்வதுண்டு. முன் கூறியவாறே தமது பதிவு செய்யப்பட்ட தேசிய அடையாளட்டை இலக்கம் (N.I.C. Number) மற்றும் மொழியினை வழங்கியதன் பின்பு, முன்பு பதிவுசெய்யப்பட்ட கடவுச் சொல் (password) இட்டு மீண்டுமொருமுறை நுழையவும் (login) ஆக வேண்டும்.

- பின்பு விண்ணப்பதாரியின் சுய தகவல்கள், கல்வி தகவல்கள் மற்றும் விருப்பமுள்ள பிரதேச செயலகத்தை தேர்ந்தெடுக்கும் தகவலை உற்படுத்தல் வேண்டும்.

- விண்ணப்பதாரியின் விருப்பப்படி வெற்றிடம் பிரதேச செயலகப் பிரிவின் பெயரினை குறிப்பிடுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும். அதற்காக பாடங்களை தேர்ந்தெடுப்பதற்கான ஆலோசனையினை பார்க்கவும். அதன் பின்பு தகவல்களை உற்படுத்தவும்.

- விண்ணப்பதாரியிற்கு மேலும் இது தொடர்பாக கோரிக்கை இருக்குமாயின், requests/comments என்ற நிரலில் குறிப்பிடவும்.

- விண்ணப்பதாரியினால் உற்படுத்தப்பட்ட தகவல்களில் சுருக்கத்தை பரிசீலித்து, பிரச்சினை இருக்குமாயின், 071 8695882 என்ற இலக்கத்தை அழைத்து ஆலோசனை பெற்றுக் கொள்ளலாம்.

- பின்பு Download Icon இனை Click செய்து PDF கோவையாக பதிவிறக்கம் செய்து கொள்ளவும். அவ்வாறே பதிவிறக்கம் செய்த PDF கோவையை அச்சிட்டு, உரியவாறு உறுதிப்படுத்தி விண்ணப்பப்படிவத்தை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மூலையில் **‘‘பட்டதாரி பயிற்ச்சியாளர்களை மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை வடமேல் மாகாண சபை பாடசாலைகளில் காணப்படும் இலங்கை ஆசிரிய சேவையில் 3 ஆம் வகுப்பில் 1(அ) தரத்தில் ஆசிரிய வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்தல் - 2022’’**

மற்றும் **வசிப்பிட மாகாணத்தை** குறிப்பிட்டு 2022.05.12 ஆந் திகதிக்கு முன் **"செயலாளர், வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு, மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருணாகல்."** ஏன்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

- எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விண்ணப்பதாரி தனது விண்ணப்பத்தை விண்ணப்பத்தின் இறுதித் திகதிக்கு முன் திருத்தியிருந்தால், இறுதியாகத் திருத்தப்பட்ட விண்ணப்பத்தின் அசல் நகலை மட்டுமே மேலே குறிப்பிடப்பட்ட அஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

- அவ் விண்ணப்பத்தின் புகைப்பட நகல் விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சையின் போது கட்டாயமாக கொண்டு வர வேண்டும்.

- (Online) விண்ணப்பப் படிவம் கோரிய இறுதி திகதிக்கு பின்பு செய்யப்படும் விண்ணப்பப் படிவத்தில் உள்ளடங்கிய தகவல்களை திருத்தம் செய்வதற்கான கோரிகை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

12. மேலுள்ள பதவிக்கு விண்ணப்பப் படிவம் கோரிய பின் நேர்முகப் பரீட்சை நடாத்தி தேர்ந்தெடுக்கப்பட்டது /தேர்ந்தெடுக்கப்படவில்லை அல்லது வெற்றிட எண்ணிக்கைப் பற்றிய இறுதித் தீர்மானம் எடுப்பது வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவாகும்.

13. விண்ணப்பப் படிவம் கோரும் அறிவித்தலுக்கு உரிய விடயம் அல்லது அவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாத அல்லது அவ் அறிவித்தலின் ஏற்பாடும் செய்யப்படாத வேறு ஏதாவது விடயம் இருந்தால் இது தொடர்பாக வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதியானது.

14. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்ற இந்த அறிவித்தலில் மொழிகளுக்கிடையில் ஏதேனும் பொருந்தாமை அல்லது முரண்பாடு இருப்பதாக தோன்றினால், அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியிலான அறிவித்தலே சரியானதாகக் கருதப்படும்.

வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

டி.பீ. விக்ரமசிங்ஹ,
செயலாளர்,
வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு.

மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருணாகல்.
2022.04 .08